செய்தி வெளியீடு எண் :157 நாள் : 24.01.2024

# செய்தி வெளியீடு

திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தைச் சார்ந்த 18 அமராவதி பழைய வாய்க்கால்களின் (இராமகுளம் முதல் கரூர் வலது கரை வரை) பாசனப் பகுதிகளில் மொத்தம் 29,387 ஏக்கர் நிலங்களுக்கு, அமராவதி ஆற்று மதகு வழியாக 2229.12 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 25,250 ஏக்கர் புதிய பாசன நிலங்களுக்கு அமராவதி பிரதானக் கால்வாய் வழியாக 1064.45 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 3293.57 மில்லியன் கன அடிக்கு மிகாமல் 25.01.2024 முதல் 15.03.2024 முடிய 50 நாட்களில் தகுந்த இடைவெளி விட்டு 28 நாட்களுக்கு நிலையிலுள்ள பயிர்களை காப்பாற்றும் பொருட்டு பாசனத்திற்காக, அமராவதி அணையிலிருந்து, தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள 54,637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
(நீர்வளத்துறை)

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in